TAMIL


sam singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# NO PATENTS ON IDEAS

## PRATCHAYA PHINTHONG

‘யோசனைகளுக்குக் காப்புரிமைகள் இல்லை (No Patents on Ideas)’ என்பது பாங்காக்கைச் சேர்ந்த ஓவியர் ‘பிரட்சயா பிந்தோங்’ சிங்கப்பூரில் வைத்த முதல் தனிக் கண்காட்சியாகும். இது நமது பண்பாட்டையும் பொருளாதார அமைப்புகளையும் வடிவமைக்கிற தொடர்புடைய செயல்முறைகள், விரைவான சைகைகள் மற்றும் உலகளாவிய பரிவர்த்தனைகளை ஆராய்கிறது. ‘Undrift’ மற்றும் ‘Untitled (சிங்கப்பூர்)’ ஆகியவற்றுக்கிடையே மாறக்கூடிய ஒரு திரையிடல் நிறுவலில் கண்காட்சி மையம் கொண்டுள்ளது. இரண்டு படங்களும் சிங்கப்பூரில் உள்ள கண்ணுக்குப் புலப்படும் மற்றும் புலப்படாத அமைப்புகளைப் பற்றிய பிந்தோங்கின் அவதானிப்புகளை, நகர-நாட்டுக்கு வான்வெளி மற்றும் வானூர்தியியலுடன் இருக்கும் உறவை வர்ணனை செய்வதன் மூலம் குறிப்பிடுகின்றன. நிறுவலின் நீட்சியாக, படக்கூடத்தின் சாய்ந்த தளமானது நகர்வு, கட்டுப்பாடு மற்றும் தடை ஆகியவற்றின் இயக்கவியலை நோக்கி நமது கவனத்தை ஈர்க்கிறது. இதில் உள்ளடங்கியுள்ள அனுபவமானது, இடம், சுற்றுச்சூழல் மற்றும் உடல் ஆகியவை தொடர்பு கொள்ளும் வழிகளில் பிந்தோங்குக்கு இருக்கும் தொடர்ச்சியான ஈடுபாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

காட்சிக்கு வைக்கப்பட்ட படைப்புகள், அவற்றின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் பண்டமாற்று ஆகியவற்றின் வழியே அவை மேற்கொண்ட பயணத்திலிருந்து பெறப்பட்ட முக்கியத்துவத்தின் அடுக்குகளைக் கொண்டுள்ளன. சில அவற்றின் பண்பாட்டு வேர்கள், உரிமை மாறுதல் அல்லது வரலாற்று நிகழ்வுகளுடனான தொடர்புகள் ஆகியவற்றின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றை வேண்டுமென்றே வரிசைப்படுத்துவதன் மூலம், பிந்தோங் இந்தப் பொருள்களைக் கதைசொல்லிகளாக மாற்றுகிறார், அவை வைத்திருக்கும் பல கதைகளை வெளிக்கொணர ஊக்குவிக்கிறார்.




**① பாராசூட் துணி மற்றும் உலோகத் தெறிதுண்டு**
சுமார் 1942-1945
ரேயான் வகை துணி மற்றும் உலோகம்
சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத் திரட்டு

இந்தப் பாராசூட் துணி மற்றும் உலோகத் தெறிதுண்டானது இரண்டாவது ஆஸ்திரேலிய அரசப் படையின் ஒரு பகுதியாக இருந்த இராணுவப் பிரிவான 2/4-வது இயந்திரத் துப்பாக்கிப் படையணியின் பிரைவேட் எட்வர்டு சார்லஸ் ஹார்டிக்குச் சொந்தமானது. ஜப்பானிடம் சிங்கப்பூர் வீழ்ந்த பிறகு ஹார்டி சாங்கியில் அடைக்கப்பட்டார், பின்னர் பர்மா மற்றும் ஜப்பானில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்.

இந்தக் கலைப்பொருள் சிங்கப்பூரில் உள்ள சாங்கி தேவாலயம் மற்றும் கலைக்கூடத்திலிருந்து கடனாகப் பெறப்பட்டது.

**②a பெயரிடப்படாதது (சிங்கப்பூர்)**
2014
மின்னிலக்கப் படம்
ஓவியரின் திரட்டு

வடகிழக்குத் தாய்லாந்தில் உள்ள உடோன் தானியில் (Udon Thani) இருந்து எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம், நகரத்திற்கு மேலே உள்ள வானத்தைச் சித்தரிக்கிறது, அதில் இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியாக F-16 ஜெட் போர் விமானம் வானத்தைக் கடப்பதைக் காணலாம். இந்த ஜெட் விமானங்கள் தாய்லாந்திடம் இருப்பது என்பது தாய்லாந்தின் விமானப்படைப் பயிற்சி வசதிகளை அணுகுவதற்கு ஈடாக சிங்கப்பூர் தாய்லாந்துக்கு F-16 ஜெட் போர் விமானங்களை வழங்குவதென அவ்விரு அரசாங்கங்களுக்கு இடையிலான 15 ஆண்டு உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும். உடோன் தானியில் உள்ள ராயல் தாய் விமானப்படைத் தளத்தில் இருந்து தினமும் புறப்படும் இந்த ஜெட் விமானங்கள் நகரின் வான்வெளியில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் ஓர் அம்சமாக மாறியுள்ளன. ஃபிந்தோங், உடோன் தானியில் வாழும் தனது நண்பர்களை உதவியில் ஈடுபடுத்தி, வானில் விமானங்கள் தோன்றும்போது அவற்றைப் படம்பிடித்து, அவற்றைக் கொண்டு நடப்பு விமானச் செயல்பாடுகளின் பதிவையும், வழிசெலுத்தல் மற்றும் தளத்தின் உரிமை பற்றிய தகவல்கள் கொண்ட வான்வெளிகள் தொடர்பான ஆவணத்தையும் உருவாக்குகிறார்.

இந்தப் படைப்பின் ஒரு பதிப்பு முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின்
சமகாலக் கலை நிலையத்தின் ‘சிங்கப்பூர் வாழிடவுதவித் திட்ட (Singapore Residencies Programme)’ திறந்த அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சிக்காக அது தனிச்சிறப்பாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## 2b Undrift

2024

மின்னிலக்கத் திரைச்சேமி, படப்பெருக்கு திரை மற்றும் ரிப்ஸ்டாப் வகை நைலான் பின்னல் துணி

ஓவியரின் திரட்டு

Undrift படைப்பில், பிந்தோங் (Phinthong) ஓர் இருப்புத் திரைச்சேமியை மீள்-உருவாக்குகிறார், அது முன்பு பாங்காக்கைத் தளமாகக் கொண்ட கணினிப் பழுதுபார்க்கும் கடை மூலம் தனது தனிப்பட்ட கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான வெளிநாட்டு நாணயங்களின் ரூபாய் நோட்டுகள் திரையில் உயருமாறும் விழுமாறும் அவை இயங்குபடம் செய்யப்பட்டுள்ளன, அவற்றின் இயக்க விகிதம் சிங்கப்பூர் முழுவதும் உள்ள வானிலை ஆய்வு மையங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட காற்றின் வேக அளவீடுகளைப் பிரதிபலிக்கிறது. இந்தக் குறிப்புகள் பிந்தோங்கின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து வந்தவை, மேலும் அவரது உரிமையின் தடயங்கள் அவற்றில் தோன்றும் மடிப்புகளிலும் கைமுறை எழுத்திலும் காணப்படுகின்றன. பொதுவியல், ஆயத்தப் பொருள்களில் பிந்தோங்கின் நுட்பமான தலையீடு என்பது மதிப்பு, உழைப்பு மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றின் உலகளாவிய அமைப்புகளை முன்னிலைப்படுத்த அவர் பொதுவியல் பொருள்கள், செயல்முறைகள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தியதை நினைவுபடுத்துகிறது.

## 3 அகலத்திற்காக ஆழத்தின் தியாகம்

2023

கையால் செய்யப்பட்ட காகிதம் மற்றும் குளவிக் கூடு;

YouTube தளத்தில் பதிவேற்றப்பட்ட, 47 நொடி முதல் 4 நிமிடம் 10 நொடி வரை கொண்ட, ஒற்றை-ஒளிவழிக் காணொளித் தொடர்

ஓவியரின் திரட்டு

அகலத்திற்காக ஆழத்தின் தியாகம் என்பது கையால் செய்யப்பட்ட காகிதம் மற்றும் You-Tube வீடியோக்களின் நிறுவல் ஆகும். விவசாயக் கழிவுகள் மற்றும் விலங்கு உரங்களைக் காகிதப் பொருள்களாக மறுசுழற்சி செய்வதில் நிபுணத்துவம் பெற்ற சியாங் மாய் (Chiang Mai) நகரைச் சேர்ந்த காகிதத் தயாரிப்பாளர்களுடன் இணைந்து ஃபிந்தோங், கைவிடப்பட்ட குளவிகளின் கூட்டைச் சிதைத்து, அதைக் கையால் செய்யப்பட்ட காகிதத்தின் ஒற்றைத் தாளாக வார்க்கிறார். காய்ந்த மலக்கழிவுகள், முட்டைப்புழு ஓடுகள், இறக்கைச் சவ்வுகள் மற்றும் பிறத் துண்டுகளின் தடயங்கள் காகிதக் கூழின் மேற்பரப்பில் பதிக்கப்பட்டுள்ளன, இது கூடு கட்டும் பழக்கம் மற்றும் செயல்பாட்டுக்கான நேரடிப் பதிவை அளிக்கிறது. கையால் செய்யப்பட்ட காகிதத்திற்கு அடுத்ததாக ஒரு QR குறியீடு உள்ளது, இது கூட்டின் உட்புறச் செல்கள் மற்றும் அறைகள் பற்றிய காணொளித் தொடர்களுக்குப் பார்வையாளர்களை வழிநடத்துகிறது. இந்தக் காணொளிகளைப் பதிவு செய்ய, பிந்தோங் ஓர் உள்நோக்கல் குழாயையும் (எண்டோஸ்கோப்) ஓர் ஒளியியல் ஆடியுடன் கூடிய ஆய்வுக் கருவியையும் கூட்டுக் குழிக்குள் அதன் உட்புறங்களைப் பார்க்கவும் பதிவு செய்யவும் செருகினார். குளவி கூட்டின் இடைவெளிகள் வழியாக சாதனத்தைத் திறமையாக உட்செலுத்தும் பிந்தோங்கின் முயற்சிகளைக் காட்சிகள் படம்பிடிப்பதுடன், கூட்டின் கட்டுமானத்தின் ஆழத்தையும் சிக்கலான தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. முப்பரிமாண வடிவம் முற்றிலும் வேறுபட்ட அமைப்பாக மறுசீரமைக்கப்பட்டுள்ளதால், இந்தப் படைப்பின் தலைப்பு, கூட்டின் பொருள் உருமாற்றத்தைக் குறிக்கிறது.

இந்தப் படைப்பு முதன்முதலில் 2023-இல் பாங்காக்கில் உள்ள STORAGE-இல் காட்சிப்படுத்தப்பட்டது.

## 4 சூசானா

2015

படச்சுருள் மற்றும் ப்ளெக்ஸிகிளாஸ் எனப்படும் ஒளிபுகும் நெகிழிப்பட்டை

ஓவியரின் திரட்டு

2015-இல், பிந்தோங் தெற்குத் தாய்லாந்தில் உள்ள பட்டாணிக்கு விதவைகள் சமூகம் ஒன்றைச் சந்திக்கச் சென்றார், அவ்விதவைகள் அவர்களது கிராமங்களில் நடந்து வரும் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள். பண்பாட்டு அடையாளம், தேசிய அரசு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளின் தாக்கம் அதிகமாக உணரப்படும் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் உள்ள மாகாணத்தில், விதவைகளின் அன்றாட வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மை மற்றும் பதற்றத்தை ஒரு புகைப்படச்சுருள் தொடரின் மூலம் பிந்தோங் சித்தரிக்கிறார். முதலில் அவர்களைப் புகைப்படம் எடுக்க எண்ணிய பிந்தோங், அதற்குப் பதிலாக விதவைகளை அழைத்து குப்பிகளில் இருந்து படச்சுருள்களை எடுத்து, நீட்டி வெளிச்சத்தில் காட்டும்படி கூறினார். மறிநிலைப் (negative) படங்கள் இல்லாத இருண்ட படத்தைக்கொண்ட படக்கீற்றுகள், பெண்களின் இருப்பு மற்றும் இல்லாமை இரண்டையும் பதிவு செய்து, கிளர்ச்சி மற்றும் வன்முறையின் கீழுள்ள அவர்களது வாழ்க்கையின் முரண்பாடுகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தப் படைப்பு முதன்முதலில் 2015-இல் சான் பிரான்சிஸ்கோவின் எர்பா பியூனா கலை மையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

இந்தப் படைப்பின் இரண்டாம் பகுதியான Nam Prik Zauquna, சிங்கப்பூரிலுள்ள அரசு சாராத் தொண்டு நிறுவன திரான்ஸியண்ட் வொர்க்கர்ஸ் கவுண்ட் டூ (TWC2) அமைப்பின் உணவுத் திட்டமான 'தி கஃப் ரோடு உணவு திட்டம்' மூலம் விநியோகிக்கப்படும்.

## 5 Nam Prik Zauquna

2024

மிளகாய்ப் பசை

ஓவியரின் திரட்டு

தென் தாய்லாந்தில் உள்ள பட்டானியைச் சேர்ந்த விதவைகளின் சமூகமான சௌக்குனாவால் (Zauquna) தயாரிக்கப்பட்ட 'நம் பிரிக் சௌக்குனா (Nam Prik Zauquna)',

முறைசாராப் பொருளாதாரங்களின் மீள்திறன் மற்றும் திறன்வளத்தை உருவகப்படுத்துகிறது. விதவைகள், கிளர்ச்சியினால் ஏற்பட்ட வன்முறையால் தங்கள் வாழ்க்கைத் துணையை இழந்த பின்னர் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 'நம் பிரிக் (மிளகாய்ப் பசை)' தயாரிக்கும் வீட்டுத் தொழிலைத் தொடங்கினர். இந்தக் கண்காட்சிக்காக 1,000 போத்தல்கள் 'நம் பிரிக்' தயாரிக்குமாறு பிந்தோங் அவர்களைப் பணித்தார். அவை திரான்ஸியண்ட் வொர்க்கர்ஸ் கவுண்ட் து (TWC2) அமைப்பின் மூலம் செய்யப்படும் உணவு விநியோகத் திட்டத்தின் மூலம் சிங்கப்பூரில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் வினியோகிக்கப்படும். வீட்டில் தயாரிக்கப்பட்ட இந்த உணவுப் பொருள்களைப் புழக்கப்படுத்துவதன் மூலம், முறைசாராப் பொருளாதாரத்தில் விதவைகள் பங்கேற்பின் பண்பாட்டு முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தை இந்தப் படைப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. படைப்பைப் பகிர்ந்துகொள்ளவும் பயன்படுத்தவும் பொதுமக்களை அழைப்பதன் மூலம், கலை, உழைப்பு மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுக்கு இடையேயான எல்லைகளைக் கலைத்து, உரையாடல் மற்றும் கூட்டுப் பிரதிபலிப்பு ஆகியவற்றை வளர்க்கும் ஒரு சமூக வெளியை ஓவியர் திறக்கிறார்.

இந்தப் படைப்பின் ஒரு பதிப்பு முன்பு 2015-இல் சான் பிரான்சிஸ்கோவிலுள்ள 'யெர்பா பியூனா' ஓவிய மையத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்தக் கண்காட்சிக்காக இந்தப் படைப்பு சிறப்பாகத் தகவமைக்கப்பட்டது.

## Offsite Artworks

**6 Nam Prik Zauquna**
2024
மிளகாய்ப் பசை
ஓவியரின் திரட்டு

தென் தாய்லாந்தில் உள்ள பட்டானியைச் சேர்ந்த விதவைகளின் சமூகமான சௌக்குனாவால் (Zauquna) தயாரிக்கப்பட்ட 'நம் பிரிக் சௌக்குனா (Nam Prik Zauquna)', முறைசாராப் பொருளாதாரங்களின் மீள்திறன் மற்றும் திறன்வளத்தை உருவகப்படுத்துகிறது. விதவைகள், கிளர்ச்சியினால் ஏற்பட்ட வன்முறையால் தங்கள் வாழ்க்கைத் துணையை இழந்த பின்னர் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 'நம் பிரிக் (மிளகாய்ப் பசை)' தயாரிக்கும் வீட்டுத் தொழிலைத் தொடங்கினர். இந்தக் கண்காட்சிக்காக 1,000 போத்தல்கள் 'நம் பிரிக்' தயாரிக்குமாறு பிந்தோங் அவர்களைப் பணித்தார். அவை திரான்ஸியண்ட் வொர்க்கர்ஸ் கவுண்ட் து (TWC2) அமைப்பின் மூலம் செய்யப்படும் உணவு விநியோகத் திட்டத்தின் மூலம் சிங்கப்பூரில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் வினியோகிக்கப்படும். வீட்டில் தயாரிக்கப்பட்ட இந்த உணவுப் பொருள்களைப் புழக்கப்படுத்துவதன் மூலம், முறைசாராப் பொருளாதாரத்தில் விதவைகள் பங்கேற்பின் பண்பாட்டு முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தை இந்தப் படைப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. படைப்பைப் பகிர்ந்துகொள்ளவும் பயன்படுத்தவும் பொதுமக்களை அழைப்பதன் மூலம், கலை, உழைப்பு மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுக்கு இடையேயான எல்லைகளைக் கலைத்து, உரையாடல் மற்றும் கூட்டுப் பிரதிபலிப்பு ஆகியவற்றை வளர்க்கும் ஒரு சமூக வெளியை ஓவியர் திறக்கிறார்.

இஃது இந்தக் கண்காட்சிக்காகப் பிரத்தியேகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது மற்றும் TWC2-இன் உணவுத் திட்டமான 'தி கஃப் ரோடு உணவு திட்டம்' மூலம் விநியோகிக்கப்படும்.

**7 கரண்டி**
2024
உருக்கிய ஈயம் மற்றும் தகரம்
ஓவியரின் திரட்டு

கரண்டி (2024) என்பது பிந்தோங் தற்போது படைத்துக்கொண்டிருக்கும் ஒரு தொடராகும், இது வடகிழக்கு லாவோஸின் இக்சியங் கௌயாங்கில் (Xieng Khouang) உள்ள பான் நபியா (Ban Napia) கிராம மக்களுடன் இணைந்து உருவாக்கப்பட்டது. 1964-இல் தொடங்கிய ஒரு பத்தாண்டலகுக் கால இரகசியப் போரில், அமெரிக்கா அந்தப் பகுதியில் மில்லியன் கணக்கான கொத்து வெடிகுண்டுகளைக் கட்டவிழ்த்து, லாவோஸை பூமியில் அதிகக் குண்டுவீசப்பட்ட நாடாக மாற்றியது. ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு வெடிகுண்டுகள் வெடிக்கத் தவறி, நாடு முழுவதும் புதைந்து கிடக்கின்றன. துப்புரவு நடவடிக்கைகளில் மூலம் மீட்டெடுக்கப்பட்ட போர் எச்சங்களின் உபரியை மிகுந்த அளவில் எதிர்கொண்ட நேபியா கிராமவாசிகள் வெடிக்காத வெடிபொருள்களில் இருந்த ஓட்டை உடைசல் உலோகத்தை உருக்கி மீளுருவாக்கத் தொடங்கினர், அவற்றை நினைவுப் பொருள்களாக விற்க, வெள்ளிப் பாத்திரங்களாக மாற்றினர். ஒரு காலத்தில் கொடிய வெடிபொருள்களாக இருந்தவற்றை ஆக்கச் செயல்பாட்டுப் பொருள்களாகவும் வர்த்தகம் செய்யக்கூடிய பொருள்களாகவும் மாற்றும் கிராமவாசிகளின் செயல்முறை பிந்தோங்கால் மேலும் மேம்படுத்தப்பட்டது, அவர் நவீன வடிவமைப்புப் பொருள்களைப் போன்று காணப்படும் உள்ளங்கை அளவிலான, கண்ணாடி போன்ற வழவழப்பு கொண்ட வடிவங்களாக அவற்றை மாற்றுகிறார். இந்த வடிவங்களின் மேற்பரப்புகள் அவை புதைக்கப்பட்ட காலத்திலிருந்து பூமியின் தடயங்களைத் தாங்கி நிற்கின்றன. வழவழப்புத்தன்மை மற்றும் ஒளிரும்தன்மையைக் கொண்டுவர அவற்றுக்கு மணல் மூலம் தேய்த்தல் மற்றும் மெருகூட்டல் ஆகிய செயல்முறைகள் தேவைப்படுகின்றன. சிங்கப்பூர் முழுவதும் பரவி, இந்தப் படைப்பு வெடிக்காத வெடிகுண்டுகளின் பொது மற்றும் நினைவுச்சின்னத் தன்மையைக் இழந்து, உறையால் மூடப்பட்ட தனித்தனிப் பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றமடையும்.